# 17

# தன்னை ஏற்படுத்தியிருந்த சபை, 1

## (3:14-17)

பிலதெல்பியாவுக்குத் தென்கிழக்கில் நாற்பத்து மூன்று மைல்கள் தொலைவில், லவோதிக்கேயாவின் பரந்து விரிந்த சிதிலங்கள் கிடக்கின்றன.[1] இந்த நகரம் அகழ்ந்தெடுக்கப்படவில்லை, மற்றும் கனத்த வளைவுகளின் உச்சிகளும் மற்ற கட்டிட அமைப்புகளும், "தன்னை ஏற்படுத்தியிருந்ததாக" நினைத்த மேட்டிமையான நகரத்தின் கவலைக்குரிய நினைவுகளில், பேருருவான கல்லறைக்கற்கள் போன்று பாறை நிலத்தில் இருந்து வெளிக்கிளம்பியவைகளாக உள்ளன. ஆசியா மைனர் பகுதியில் நான் பயணம் சென்று கண்டிருந்த இடங்களில் எதுவும், லவோதிக்கேயாவின் வறண்ட தனிமையைப்போல் என் இருதயத்தைக் கலக்கம் அடையச் செய்தது இல்லை.

இந்தப் பாடமானது "ஆசியாவிலுள்ள ஏழு சபைகள்" (1:4அ) பற்றிய கடைசிப் பாடமாக உள்ளது. நாம் எபேசுவில் தொடங்கி பெர்கமு கடற்கரை வரையிலும் சென்றோம். தியத்தீராவை நோக்கி உள்நாட்டிற்கு வந்தபின்பு, நாம் லவோதிக்கேயாவை நோக்கித் தெற்கு முகமாய்ப் பயணம் செய்கின்றோம். அந்த நகரத்தில் இருந்து, மேற்கில் எண்பது மைல்கள் பயணம் செய்தால் நாம் திரும்பவும் எபேசுவில் இருப்போம் - நமது வட்டப்பயணம் நிறைவடையும்![2]

### பண்புகள்

லவோதிக்கேயா நகரத்தின் மூன்று பண்புகள் அங்கிருந்த சபையுடன் நேரடியாக உறவுபடுகின்றன:

(1) அங்கிருந்த குடிமக்களில் பலர் செல்வந்தர்களாய் இருந்தனர். லவோதிக்கேயா நகரம், அந்த நாட்களில் உலகத்தின் செல்வம்மிகுந்த வர்த்தக நகரங்களில் ஒன்றாக இருந்தது. அதன் - கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் மிக முக்கியமான நெடுஞ்சாலையின் பக்கமாய் அகன்றிருந்த - வியூகத்துவமான நிலையானது அதை மாபெரும் வங்கிகளுடன் கூடிய ஒரு நிதிநிலை மையமாக்குவதற்கு உதவியிருந்தது. அது, "ஆசியாவின் வால் தெரு"[3] என்றும் "கோடீஸ்வரர்களின் நகரம்" என்றும் அழைக்கப்பட்டிருந்தது.

அதன் குடிமக்கள் நிதிநிலை சார்ந்த விஷயங்களில் ''அதை நிலைநாட்டி/ஏற்படுத்தி" இருந்ததாக நினைத்திருந்தனர். அவர்களிடத்தில் யாரேனும் ஒருவர், "உங்களுக்கு நான் எவ்விதத்தில் உதவக்கூடும்?" என்று

*கேட்டால், அவர்களின் பதிலானது "எங்களுக்கு ஒன்றும் தேவையில்லை" என்பதாகவே இருக்கும் (3:17ஐக் காணவும்). கி.பி. 60ல் ஒரு பூமியதிர்ச்சியினால் லவோதிக்கேயா அழிக்கப்பட்டபோது, அதன் குடிமக்கள் ரோமாபுரியில் இருந்து வந்த உதவியை ஏற்க மறுத்து, தங்கள் சொந்த செலவிலேயே நகரத்தைக் திரும்பக் கட்டியெழுப்பினர்.*[4]

*(2) பொதுவாக அவர்கள் ஆரோக்கியம் உள்ளவர்களாய் இருந்தனர். அந்த நகரத்திலிருந்த வெளியில் பதிமூன்று மைல்கள் தூரத்தில், புகழ்பெற்ற மருத்துவ மையம் ஒன்று இருந்தது. கண்களுக்குக் கலிக்கமாக ஏற்படுத்தக் கூடிய பிரகியாவின் துகள் ஒன்று அவ்விடத்தில் தயாரிக்கப்பட்டது. இந்தத் துகள் உலகம் முழுவதற்கும் அனுப்பப்பட்டது.*

*உலகப்புகழ் பெற்றிருந்த மருத்துவ குணம் வாய்ந்த வெந்நீர் ஊற்றுக்களைக் கொண்டிருந்த ஏராப்போலிஸ் (கொலோசெயர் 4:13) என்ற இடமானது, ஆறுமைல்கள் தூரத்தில் இருந்தது. எனது பயணக் குழுவினர் லவோதிக்கேயாவின் சிதிலங்களைப் பார்த்தபோது, எங்கள் பயண வழிகாட்டி, தொலைவில் இருந்த, வெள்ளை வண்ணம் பூசப்பட்டதாய்க் காணப்பட்ட ஒரு கரையைச் சுட்டிக்காண்பித்தார். ''அங்கே அந்தக் கரையின் உச்சியில் ஏராப்போலிஸ் உள்ளது'' என்று அவர் கூறினார். நாங்கள் அங்கு வாகனத்தில் சென்றபோது, மலைக்குன்றில் இருந்து ஓடிவந்த தண்ணீரில் இருந்து தாதுக்கள் படிந்தபடியினால் அந்த நிறமாற்றம் ஏற்பட்டிருந்ததைக் கண்டோம். அந்தக் கரையின் உச்சியில், பயணிகளைக் கவர்ந்திழுக்கும் நூற்றுக்கணக்கான சிறுகுளங்கள், வேதாகமம் எழுதப்பட்ட காலத்தில் இருந்தது போலவே இருந்தன. அந்தப் பகுதியானது நீண்டகாலமாகவே, ஒரு ஆரோக்கிய சாலையாக இருந்துள்ளது.*[5]

*(3) அவர்களில் பெரும்பான்மையானவர்கள் நன்கு உடுத்தியவர்களாய் இருந்தனர். வழக்கத்திற்கு மாறான நேர்த்தியான கம்பளிரோமம் கொண்ட கறுப்பு ஆடுகள்* [black sheep][6] *அருகில் இருந்த குன்றுகளில் மேய்ந்து கொண்டிருந்தன. இந்த ஆடுகளில் இருந்து கிடைத்த மென்மையான, பளபளப்புள்ள கறுப்புக்கம்பளியானது விலையுயர்ந்த உடையாகத் தயாரிக்கப்பட்டது. இந்த உடையானது உலகச் சந்தைகளில் மிக உயர்ந்த விலைகளைப் பெற்றுத் தந்தது, ஆனால் லவோதிக்கேயாவின் குடிமக்களுக்கு இவைகள் நியாயமான விலைகளில் கிடைத்தன. இவ்விதமாக நாம் லவோதிக்கேயாவின் பின்வரும் பண்புகளைக் காண்கின்றோம்:*

| **நகரம்** |
|---|
| *செல்வவளம்*<br>*(வங்கித்துறை)*<br>*மருத்துவ மையம்*<br>*(கண்களுக்கு விசேஷித்த சிகிச்சை)*<br>*உடைத் தயாரிப்பு நிறுவனம்*<br>*(கறுப்புக் கம்பளி)* |

## *சபைக்குழுமம் (3:14அ)*

*''லவோதிக்கேயா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்'': (வசனம் 14அ). லவோதிக்கேயாவில் இருந்த சபைக்குழுமம், அனேகமாகப் பவுல் எபேசுவில் இருந்தபோது நிலைநாட்டப்பட்டிருக்கலாம் (நடபடிகள் 19:1, 8-10).[7] எவ்வகையிலும், இதனுடனும் இதன் உறுப்பினர்களுடனும் அப்போஸ்தலர் (பவுல்) நன்கு பழக்கப்பட்டவராக இருந்தார். அவர் கொலோசெயருக்கு (லவோதிக்கேயாவில் இருந்து சுமார் பத்து மைல்கள் தொலைவில் இருந்த ஊர்) எழுதியபோது, ''உங்களுக்காகவும் லவோதிக்கேயாவிலிருக்கிற வர்களுக்காகவும் ... மிகுந்த போராட்டம் எனக்கு உண்டென்று நீங்கள் அறியவிரும்புகிறேன்'' என்று எழுதினார் (கொலோசெயர் 2:1அ). அந்த நிருபத்தின் முடிவில், லவோதிக்கேயாவில் இருந்த கிறிஸ்தவர்களை அவர் மீண்டும் குறிப்பிட்டு, அவர்களுக்கு ஒரு கடிதத்தைத் தாம் அனுப்பி யிருந்ததாகக் கூறினார்:*

> *லவோதிக்கேயாவிலிருக்கிற சகோதரரையும், நிம்பாவையும், அவன் வீட்டில் கூடுகிற சபையையும் வாழ்த்துங்கள். இந்த நிருபம் உங்களிடத்தில் வாசிக்கப்பட்டபின்பு இது லவோதிக்கேயா[8] சபையிலும் வாசிக்கப்படும்படி செய்யுங்கள். லவோதிக்கேயாவி லிருந்து[9] வரும் நிருபத்தை நீங்களும் வாசியுங்கள் (கொலோசெயர் 4:15, 16).*

*வெளிப்படுத்தின விசேஷம் எழுதப்பட்ட காலத்தில், லவோதிக்கே யாவில் இருந்த சபைக்குழுமம் சுமார் முப்பது ஆண்டுகளுக்கும் அதிகமான காலங்களாக இருந்து வந்தது.*

## *கிறிஸ்து (3:14ஆ, இ)*

*சபைகளுக்கு எழுதப்பட்ட கடிதங்களில் முதன்முறையாக (மற்றும் ஒரே முறை), இயேசு தம்மை அடையாளப்படுத்திக் கொள்வதற்குப் பயன்படுத்திய சொற்றொடர்களின் பெரும்பகுதியானது, வெளி. புத்தகத்தின் முதல் அதிகாரத்தில் பயன்படுத்தப் பட்டவற்றைப் பிரதிபலிக் காததாக இருந்தது.[10] ஒரு மருத்துவர், நோயாளிக்கான தமது சிகிச்சை முறையை விசேஷித்த தேவைகளுக்கு ஏற்றாற்போன்று தகவமைத்துக் கொள்வதுபோல், இயேசு தமது கடிதங்களை, குறிப்பிட்ட சபைக்குழுமங் களின் தேவைகளைச் சந்திக்குமாறு தகவமைத்துக் கொண்டார். இந்தக் கடிதத்தில் இயேசு பட்டியலிட்ட பண்புகள், லவோதிக்கேயாவில் இருந்த சபையின் பண்புகளுடன் மிகநுண்மையான வகையில் நேர்மாறானவை களாய் இருந்தன.*

*முதலாவது, நிச்சயமற்ற செல்வங்களில் நம்பிக்கை வைத்திருந்த ஒரு சபைக்குழுமத்திற்கு, இயேசு தம்மை, எப்போதும் நம்பிக்கை வைக்கப்படக் கூடியவர் என்று அடையாளப்படுத்தினார்: "உண்மையும் சத்தியமுமுள்ள*

*சாட்சியும், ... ஆமென் என்பவர்" (வசனம் 14ஆ).*

*வேதாகமத்தில் இந்த ஒரு இடத்தில் மட்டுமே "ஆமென்" என்பது இயற்பெயராகக் காணப்படுகிறது.[11] சிலர், "ஆமென்" என்பது ஜெபம் முடிந்தது என்பதற்கான ஒரு வார்த்தை அடையாளக்குறி என்பதைவிட அதிகமானதாக இருப்பதில்லை என்று நினைக்கின்றனர், ஆனால் இவ்வார்த்தையானது ஒரு விசேஷித்த அர்த்தத்தைக் கொண்டுள்ளது. இது முதலில் ஒரு எபிரெயச் சொல்லாகவும், பின்பு ஒரு கிரேக்கச் சொல்லாகவும் இருந்தது, இப்போது இது ஒரு ஆங்கில மற்றும் தமிழ்ச் சொல்லாக இருக்கிறது; ஆனால் எந்த மொழியிலும் இது உண்மைநிறைந்த தன்மையை உறுதிப்படுத்துவதாக உள்ளது.[12] ஒரு பொது ஜெபத்தில் நாம், நமது "ஆமென்" என்பதைக் கூட்டும்போது (1 கொரிந்தியர் 14:16), நாம் அந்த ஜெபத்தின் மீது நமது அங்கீகார முத்திரையை இடுகின்றோம். வேதாகமச் செய்திக்கு நாம் "ஆமென்" என்று கூறும்போது (நெகேமியா 5:13), நாம் "அது சரியானது!" என்று கூறுகின்றோம். "ஆமென்" என்பதை ஜெபத்தின் தொடக்கத்திலோ அல்லது முடிவிலோ (வெளிப்படுத்தின விசேஷம் 7:12; 22:20, 21) அல்லது எந்த வேளையிலும் ஒரு விஷயம் மெய்யானது என்பதை உறுதிப்படுத்த நாம் விரும்பும்போதோ பயன்படுத்தலாம். இயேசு, கனமான கூற்றுக்களுக்கு முன்பாக "மெய்யாகவே"[13] என்ற வார்த்தையை அடிக்கடி பயன்படுத்தினார் (மத்தேயு 5:18; யோவான் 1:51ஐக் காணவும்); "மெய்யாகவே" என்பது ஆமென் என்ற வார்த்தையின் மொழிபெயர்ப்பாக உள்ளது.*

*"ஆமென்" என்ற சொற்பதம், "உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சியும்"[14] என்ற சொற்றொடருடன் பிணைக்கப்படுகின்றபோது, இயேசுவின் மீது முழுமையாக நம்பிக்கை வைப்பதற்கான வல்லமை நிறைந்த ஒரு கூற்றை நாம் பெறுகின்றோம்!*

*இரண்டாவது, சுய நிறைவு கொண்டிருந்ததாக உணர்ந்திருந்த ஒரு சபைக்குழுமத்திற்கு, இயேசுவே அவர்களின் உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களின் ஆதாரமூலமாக இருந்ததாகக் குறிப்பிட்டார்: "தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிற ... வர்" (வசனம் 14இ). "தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிறவர்" என்ற சொற்றொடர், "சிருஷ்டிக்கப்பட்டவர்களில் முதல்வர்"[15] என்று அர்த்தப்படுத்துவதில்லை, ஆனால் அதற்கு மாறாக, "எல்லாவற்றையும் தொடங்கி வைத்தவர்"[16] என்றே அர்த்தப்படுகிறது.* NASB *வேதாகமத்தில், "சிருஷ்டிக்கு" என்ற வார்த்தையின்மீது பின்வரும் பக்கக் குறிப்பு உள்ளது:* "I.e., origin or source"[17] *("அதாவது, ஆதாரமூலத்தின் தொடக்கம்"). இயேசுவினால் பயன்படுத்தப்பட்ட இந்தச் சொல்லாக்கமானது, பவுல் கொலோசெயருக்கு எழுதிய நிருபத்தில் பயன்படுத்திய சொல்லாக்கத்தைப் போன்றதாக உள்ளது:*

> *அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர். ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது. பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்*

*களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப் பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது (கொலோசெயர் 1:15-17).*[18]

*"அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது" என்றால், லவோதிக்கேயர்கள் தங்களின் உலகப்பிரகாரமான வளமைக்காகத் தங்களையே பாராட்டிக் கொள்வதற்குப் பதிலாக, கர்த்தருக்கு நன்றிசெலுத்துபவர்களாய் இருந்திருக்க வேண்டும்.*

## *அவர்களின் நிலை*
## *(3:15)*

*லவோதிக்கேயர்களின் நிலை பற்றிய இயேசுவின் மதிப்பீடானது, அவர்கள் ஏற்றுக்கொள்வதற்குக் கடினமானதாய் இருந்த காரணத்தினால், இயேசு தமது நம்பத்தகுந்த தன்மையையும் தெய்வீகத்தையும் வலியுறுத்தி யிருக்கலாம். லவோதிக்கேயாவில் இருந்த சபையானது பாராட்டு எதையும் பெற்றிராத ஒரே சபையாக இருந்தது. சர்தையில் இருந்த சபை ஒரு குழு என்ற வகையில் பாராட்டு எதையும் பெற்றிருக்கவில்லை, ஆனால் அவர்கள் அப்போதும்கூட, "தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தாத சிலபேர்" களைக் கொண்டிருந்தனர் (3:4). லவோதிக்கேயாவில் "சிலபேர்"கூட அவ்வாறு இருக்கவில்லை. ஆகையால் இயேசு, தாம் கூறவேண்டியிருந்த யாவும், வார்த்தைகள் மகிழ்ச்சியற்றவைகளாய் இருந்தாலும், மெய்யான வைகளே என்று உறுதிப்படுத்துவதைக் கொண்டு தொடங்கினார்!*

*இயேசு, "உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்" (வசனம் 15அ) என்று கூறியதன்மூலம், சபைக்குழுமத்தைப் பற்றிய தமது மதிப்பீட்டைத் தொடங்கினார். லவோதிக்கேயாவில் இருந்த சபை "கிரியைகளை" கொண்டிருந்தது என்பதை அவர் மறுக்கவில்லை; அவர்கள் சிலவற்றைச் செய்துகொண்டிருந்தனர். இருப்பினும், அவர்கள் செய்து கொண்டிருந் தவை எதுவாயிருப்பினும், அவைகள் பணத்தொடர்பானவைகளாயும் பெருமைபாராட்டக்கூடியவையாகவுமே இருந்தன: "நாங்கள் வெள்ள நிவாரணத்திற்கென்று அந்தியோகியாவுக்கு ஆயிரம் சேக்கல்களை அனுப்பி வைத்தோம்! நாங்கள் எத்தியோப்பியாவுக்குப் பன்னிரண்டு இரதங்கள் நிறைய உணவுப் பொருட்களை அனுப்பி வைத்தோம்!" தேவன் ஒரு மனிதனை உலகப்பிரகாரமான பொருட்களினால் ஆசீர்வதிக்கும்போது, தனிப்பட்ட ஈடுபாடு எதுவும் இன்றி பணத்தைப் பிறகுக்குக் கொடுத்தல் என்பது அம்மனிதருக்குச் சாத்தியமானதாக உள்ளது. உண்மையான தியாகம் எதையும் ஏற்படுத்தாமல் அவர் தமது மனச்சான்றுக்கு ஒத்தடம் கொடுத்துக் கொள்ளவும் சாத்தியக்கூறு உள்ளது!*[19]

*பின்பு இயேசு அவர்களின் பிரச்சனையை எடுத்துரைத்தார்: "நீ குளிருமல்ல அனலுமல்ல" (வசனம் 15அ, ஆ). Zestos என்ற கிரேக்க வார்த்தையே "அனல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இதிலிருந்தே*

*நாம் zest (பெரும் ஆர்வம்) என்ற ஆங்கில வார்த்தையைப் பெறுகின்றோம். இது "கொதிநிலையுள்ள அனலாக இருத்தல்" என்று அர்த்தப்படுகிறது! "குளிர்" என்பது Zestos என்பதற்கு நேர்மாறானதாக இருப்பதால், "குளிர்" என்ற வார்த்தையானது பனிக்கட்டி போன்று குளிராக இருத்தலைக் குறிப்பதாக இருக்க வேண்டும் (மத்தேயு 24:12ஐக் காணவும்). லவோதிக்கேயாவில் இருந்த கிறிஸ்தவர்கள், ஆவிக்குரிய நிலையில் பனிக்கட்டி போலக் குளிராக (அதாவது, அவர்கள் அவிசுவாசிகளாகவும் தேவனுடைய மக்களைத் துன்புறுத்துபவர்களாகவும்) இல்லாதிருந்த வேளையில், அவர்கள் ஆவிக்குரிய வகையில் அனல் கொண்டவர்களாகவும் இருக்கவில்லை. (அவர்கள் கர்த்தருக்கென்று அனலுள்ளவர்களாய் இருக்கவில்லை.) அவர்கள் "வெதுவெதுப்பாக" மாத்திரம் இருந்தனர் (3:16).*

*நான் அறிந்துள்ள ஒவ்வொரு சபையும், தனது வெதுவெதுப்பான உறுப்பினர்களைக் கொண்டுள்ளது; இவர்கள், தனிப்பட்ட ஜெபம், வேதாகமப் படிப்பு, மற்றும் சுயபரிசோதனை ஆகியவற்றில் அக்கறையற்ற உறுப்பினர்களாக உள்ளனர்; இவர்கள் சபைக்கு வருகை தருவதில் சீர்த்தன்மையற்ற உறுப்பினர்களாக உள்ளனர்; இவர்கள் தங்கள் கொடுத்தலில் ஒருக்காலும் தியாகம் செய்திராத உறுப்பினர்களாக உள்ளனர்; இவர்கள் உள்ளூர் சபையின் செயல் திட்டங்களில் கொஞ்சமே அக்கறை காண்பிக்கின்றவர்களாக உள்ளனர்; இவர்கள் வியாதிப்பட்டவர் களைச் சந்தித்தல், புலம்புபவர்களை ஆறுதல்படுத்துதல் அல்லது இழந்து போகப்பட்டவர்களுக்குப் போதித்தல் ஆகியவற்றை அரிதாகவே செய்கின்ற உறுப்பினர்களாக உள்ளனர்; இவர்கள் "கிறிஸ்துவினிமித்தம் தங்களை ஒருக்காலும் எந்த வசதிக்குறைவிற்கும் இட்டுக்கொண்டதில்லை, எந்த ஏளனத்தையும் வீரத்துடன் தாங்கியிருக்கவில்லை அல்லது எந்த ஒரு வசதியையும் கைவிட்டதும் இல்லை, ... ."[20]*

*மாறுபாடுள்ள அந்த உறுப்பினர்களுக்கு இயேசு, "நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும்" என்று கூறினார் (வசனம் 15இ). இதைப் பிரசங்கியார்கள், "ஒன்று, முழுவதுமாக உள்ளிருங்கள் அல்லது முழுவதுமாக வெளியேறுங்கள்!" என்று கூறுவதன் மூலம் தொகுத்துரைத் துள்ளனர். ஒரு பிரசங்கியார், "ஆனால் கதவருகில் நிற்பதை நிறுத்திவிடுங் கள்; நீங்கள் ஒரு நழுவிச்செல்லுதலுக்குக் காரணமாகின்றீர்கள்!" என்று கூடுதலாகக் கூறினார்.*

*முதலில், இயேசு தாம் எதை விரும்பினார் என்று கூறியது குழப்பம் ஏற்படுத்துவதாக இருக்கலாம். அவர்கள் "அனலாக" இருக்க வேண்டும் என்று அவர் விரும்பியது ஏன் என்பதைக் காண்பது சுலபமானதாக உள்ளது. "அனல்"[21] என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தையானது வழக்கமாக "ஊக்கம்" என்பதைத் தரவழைக்கிறது. எடுத்துக்காட்டாக, ரோமர் 12:11ல் பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தையானது, நாம் யாவரும் "ஆவியில் ஊக்கமாக இருந்து கர்த்தருக்கு ஊழியம் செய்யவேண்டும்" என்று அறைகூவல் விடுக்கிறது. அவர்கள் வைராக்கியமாகவும் ஊக்கமாகவும் இருக்கும்படி இயேசு விரும்பியது ஏன் என்பதைப் புரிந்துகொள்வதில் நமக்குப் பிரச்சனை எதுவும் இருப்பதில்லை.*

இதற்கு மறுபுறத்தில், அவர்கள் "வெதுவெதுப்பாக" இருப்பதற்குப் பதில் "குளிராக" இருக்க வேண்டும் என்று அவர் விரும்பியது ஏன்?[22] நாம், "ஒரு கிறிஸ்தவராக - ஒருபகுதி ஈடுபாடுள்ள கிறிஸ்தவராகவாவது - இருத்தல் என்பது, கிறிஸ்தவரல்லாதவராக இருத்தலைக் காட்டிலும் சிறந்ததாக இருப்பதில்லையா?"[23] என்று நாம் தர்க்கம் செய்கின்றோம். வரையரைக்குட்பட்ட ஒப்புக்கொடுத்தல் என்பது மாறுதல் அடையும் நிலையில், ஆவிக்குரிய வகையில் ஒரு படி வளரும் நிலையில் உள்ளதென்றால் நமது தர்க்கம் சரியானதாகவே உள்ளது. மதப்பின்னணி எதுவுமற்றவராக இருந்து கிறிஸ்துவுக்குள் குழந்தையாகிய ஒருவர் ஆராதனை ஊழியங்கள் சிலவற்றுக்கு வருகைதரத் தொடங்கும்போது நாம் அகம் மகிழ்கின்றோம். அவர் எதுவும் கொடுக்காத நிலையில் இருந்து சிலவற்றைக் கொடுத்தல் என்ற நிலைக்குக் கடந்து செல்வதைக் காண்பதில் நாம் சந்தோஷம் அடைகின்றோம். வளர்ச்சிக்கான எந்தச் சான்றும் அவர் கிறிஸ்தவராக வளரத்தொடங்கியுள்ளார் மற்றும் அவர் இன்னும் நீண்டதூரம் செல்ல வேண்டியிருக்கிறது என்பதை அவர் புரிந்துகொள்ளும் வரைக்கும் கொண்டாடத்தக்கதாகவே உள்ளது.

லவோதிக்கேயாவில் இருந்த கிறிஸ்தவர்களிடத்தில் விஷயம் இப்படிப்பட்டதாக இருக்கவில்லை. அவர்களின் வெதுவெதுப்பான தன்மை என்பது ஒரு நிலையான சூழ்நிலையாக, வாழ்வின் வழியாக இருந்தது. உண்மையில் அவர்கள், தங்களின் ஆவிக்குரிய நிலையில் பெருமைகொண்டிருந்தனர் (3:17). வரைமுறைக்குட்பட்ட ஈடுபாடு என்பது மாறுதலுக்கு உட்படும் நிலையாக இருப்பதில்லை என்னும்போது, ஆவிக்குரிய முறையில் பனிக்கட்டிபோல் குளிர்ந்த நிலையில் இருத்தலைக் காட்டிலும் இது விரும்பித்தேர்ந்து கொள்ளப்படுவதாக இருப்பதில்லை. அவர்கள் வெதுவெதுப்பாய் இருப்பதைக் காட்டிலும் குளிராய் இருந்தால் நலமாயிருக்கும் என்று இயேசு விரும்பியிருந்ததற்கு, குறைந்தது மூன்று காரணங்களைக் கொடுக்க என்னை அனுமதியுங்கள்:

(1) பனிக்கட்டிபோலக் குளிர்ந்த நிலை என்பது அதிகம் நேர்மையானதாக உள்ளது, ஏனெனில் அது கிறிஸ்தவராய் இருப்பதாக உரிமை கோருவதில்லை.

(2) சுயதிருப்தி கொண்ட, மனநிறைவு உடைய, வெதுவெதுப்பான தேவனுடைய பிள்ளையை மாற்றுவதைக் காட்டிலும், கிறிஸ்தவர் என்று நடிக்காமல்கூட இருக்கின்ற, பனிக்கட்டிபோலக் குளிர்ந்த தனிநபரை மாற்றுவது என்பது அதிக நம்பிக்கை உடையதாக உள்ளது (எபிரெயர் 6:4-6; 2 பேதுரு 2:20ஐக் காணவும்).

(3) வெதுவெதுப்பான தன்மை என்பது, குளிர்ந்த தன்மையைக் காட்டிலும் அதிகமாக சபைக்கு ஊறுவிளைவிக்கிறது. தேவபக்தியற்ற ஒரு புறதெய்வ வணக்கத்தாரைச் சுட்டிக்காண்பித்து, "அதனால்தான் நான் கிறிஸ்தவனாகவில்லை!" என்று எவரொருவரும் கூறியதாக நான் ஒருக்காலும் அறிந்தது இல்லை, ஆனால் சபையில் உள்ள அரைமனதான உறுப்பினர்களைச் சுட்டிக்காண்பித்து, "நான் ஏன் கிறிஸ்தவனாக வேண்டும்? அவர்களைப்போல நானும் நல்லவனாகவே இருக்கின்றேன்!"

என்று கூறுபவர்களை நான் அறிந்திருக்கின்றேன்.

சர்தையில் இருந்தவர்களுக்கு எழுதப்பட்ட கடிதத்தைப்போல், லவோதிக்கேயாவில் இருந்தவர்களுக்கு எழுதப்பட்ட கடிதம் - அந்த நகரத்தில் கணிசமான அளவுக்கு யூதர்கள் இருந்தனர்[24] என்ற உண்மை காணப்பட்டபோதும்கூட - உபத்திரவம் பற்றி எதுவும் குறிப்பிடுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கதாக உள்ளது. லவோதிக்கேயாவில் இருந்த கிறிஸ்தவர்களைச் சாத்தான் தனியே விட்டுவிட்டது ஏன்? அவர்கள் இருந்த நிலையிலேயே அவர்களை அவன் விரும்பினான்! அவர்கள் தங்களின் ஆவிக்குரிய வகையில் மேம்போக்காக இருக்கும் நிலையைத் தக்கவைத்துக் கொண்டிருந்த வரைக்கும், அவர்கள் ரோமாபுரியின் சிறைக்கைதிகளாய் இருக்கும் நிலையில் அவனது ஊழியத்திற்கு உதவுவதைக் காட்டிலும், அவர்கள் சுயாதீனமுள்ள மனிதர்களாய் இருக்கும் நிலையில் அதிகமாக உதவுவார்கள்!

## விளைவு (3:16)

லவோதிக்கேயர்கள் தங்களின் ஆவிக்குரிய நிலைபற்றித் திருப்தியடைந் திருக்கலாம், ஆனால் கர்த்தர் அவ்வாறு திருப்தியடையவில்லை. அவர் களிடத்தில் அவர், “இப்படி நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப் பாயிருக்கிறபடியினால் உன்னை என் வாயினின்று வாந்திபண்ணிப் போடுவேன்[25]” என்று கூறினார் (வசனம் 16). “வாந்திபண்ணிப்போடுவேன்” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள *emeo* என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து, நாம் வாந்திக்குக் காரணமாகும்படி வடிவமைக்கப்பட்ட ஒரு முகமைப்பொருளைக் குறிக்கும் “emetic” என்ற ஆங்கில வார்த்தையைப் பெறுகின்றோம். தெளிவான மொழிநடையில் கூறுவதென்றால், இயேசு “நீ என்னை வாந்தியெடுக்க விரும்பும்படி செய்கின்றாய்” என்று கூறினார்.[26] அவர்களின் ஆவிக்குரிய சுயதிருப்தியானது, வயிற்றில் வெதுவெதுப்பான தண்ணீர் ஏற்படுத்தும் செயல்விளைவை இயேசுவுக்கு ஏற்படுத்தியிருந்தது. அநேக ஆண்டுகளாக, உடலுக்குக் கேடு விளைவிக்கக் கூடிய எதையாவது உண்டிருந்தால், அதை வாந்தி எடுப்பதன் மூலம் வெளியே கொண்டுவர வெதுவெப்பான தண்ணீர் குடிக்கக் கொடுக்கப்பட்டது. லவோதிக்கேயாவைச் சுற்றிலும் இருந்த பகுதியில் வெந்நீர் ஊற்றுக்கள் ஏராளமாய் இருந்தன, அனேகமாக ஒன்றுக்கு மேற்பட்ட தாகமுள்ள பயணிகள் அந்த ஊற்றில் இருந்து ஆழமாக தண்ணீரைக் குடித்து அதன்மூலம் குமட்டல் எடுக்கும் நிலைக்கு உட்பட்டிருக்கலாம்.

இவ்விதமாக இயேசு, “உன்னை என் வாயினின்று வாந்திபண்ணிப் போடுவேன்” என்று கூறியபோது, அவர் “நீ என்னை வியாதிப்படுத்து கின்றாய்!” என்று கூறினார். மேலும் அவர், “உன் நிர்ப்பாக்கியமான நிலையில் இருந்து நீ மனந்திரும்பாவிட்டால், என்னுடன் நீ நெருங்கிய உறவுகொள்ள இயலாது” என்றும் கூறினார்.[27] அவர்களின் நித்திய அடைவிடமானது இடர்ப்பாட்டில் இருந்தது!

# நேர்மாறு
## *(3:17)*

*வாசிப்பவர், கடிதத்தின் இந்த இடத்தை அடைந்தபோது, லவோதிக்கேயர்கள் அனேகமாக, அந்தக் கடிதமானது இன்னொரு சபைக்குழுமத்திற்கு எழுதப்பட்ட கடிதமாயிருக்கலாம், அது இங்கு தங்கள் கடிதங்களுடன் கலந்திருந்தது என்று நினைத்திருக்கலாம். அவர்கள், ''முகவரியை மீண்டும் பாருங்கள். பெயர்கள் ஏதோ ஒருவகையில் மாறியிருக்கவில்லை என்பதை நீங்கள் நிச்சயப்படுத்திக் கொண்டீர்களா?'' என்று கேட்பதை என்னால் கற்பனை செய்ய முடிகிறது. ஒரு உண்மை நிச்சயமானதாக உள்ளது: அவர்கள் தங்களைக் கர்த்தர் கண்டவிதத்தில் காணவில்லை. அவர்களிடத்தில் இயேசு, "நான் ஐசுவரியவானென்றும், திரவியசம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும், சொல்லுகிறபடியால்" என்று கூறினார் (வசனம் 17ஆ).[28] அவர்கள் தங்களின் ஊக்கக் குறைவிற்காக வெட்கப்படுவதற்குப் பதிலாக, அதைப்பற்றிப் பெருமை பாராட்டியிருந்தனர். ஆவிக்குரிய வகையில் தனித்திருத்தலை மக்களில் சிலர் ஒழுக்கநெறியாக எண்ணுகின்றனர்,[29] மற்றும் அவர்கள், கிறிஸ்தவர்கள் உணர்வெழுச்சியடையும்போது சங்கடப்படுகின்றனர்.*

*பெரும்பாலான மொழிபெயர்ப்புகளில் பிரதிபலிக்கப்பட்டிராத திரும்பக்கூறுதல் என்பது மூல வசனத்தில் உள்ளது. இவ்வசனப்பகுதியானது, நேரடி அர்த்தத்தில் ''நான் ஐசுவரியவானாக இருக்கின்றேன் மற்றும் ஐசுவரியவானாகிக் கொண்டிருக்கின்றேன், எனக்கு ஒரு குறைவுமில்லை'' என்றுள்ளது. திரும்ப கூறுதல் என்பது வலியுறுத்தத்திற்கானதாக உள்ளது. அவர்கள், ''நாங்கள் ஐசுவரியவான்கள், ஐசுவரியவான்கள்,* ***ஐசுவரிய வான்கள்!*** *'' என்று கூறிக்கொண்டிருந்தனர். அவர்கள் அனேகமாக, உலகப்பிரகாரமான மற்றும் ஆவிக்குரிய ஐசுவரியங்கள் இரண்டையும் சிந்தையில் கொண்டிருக்கலாம்; பூமிக்குரிய செல்வங்களைப் பலர், பரலோகத்தின் அங்கீகாரத்திற்கு நிரூபணமாகக் கண்ணோக்குகின்றனர் (மத்தேயு 19:24, 25ஐக் காணவும்). சபைக்குழுமம் ஒன்று, வசீகரமான கட்டிடத்தையும், புகழ்பெற்ற பிரசங்கியார் ஒருவரையும், ஊழியத்திற்கான மனதை ஈர்க்கும் செயல்திட்டம் ஒன்றையும் கொண்டிருந்தும், ஒரு கதவு ஆணியைப்போல் செத்ததாக இருக்கச் சாத்தியம் உள்ளது! என்பதை நாம் அறியவேண்டும் என்று இயேசு விரும்பினார்.[30]*

*லவோதிக்கேயர்கள், தாங்கள் செல்வந்தர்களாய் இருந்ததாக நினைத்தனர், ஆனால் அவர்கள் சுயமாகவே வஞ்சிக்கப்பட்டவர்களாய் இருந்தனர். இயேசு, "நீ நிர்ப்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்க வனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாயிருக்கிறதை அறியாமல்" என்று கூறினார் (வசனம் 17அ). "மனுஷன் பார்க்கிறபடி தேவன் பார்க்கிற தில்லை'' என்பது மீண்டும் ஒருமுறை நமக்கு நினைவுபடுத்தப்படுகிறது (1 சாமுவேல் 16:7).*

*அவர்களின் ஆவிக்குரிய நிலையைத் தொகுத்துரைக்க முதலில் இயேசு, பொதுவான சொற்றொடர்களைப் பயன்படுத்தினார். "நிர்ப்பாக்கியம்"[31]*

*என்பது அவ்வாறு பயன்படுத்தப்பட்ட ஒரு வார்த்தையாக இருந்தது. "நிர்ப்பாக்கியம்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது, "கல்வெட்டும் இடத்தில் வேலைசெய்பவர்கள் அல்லது சுரங்கங்களில் வேலை செய்யும்படி தண்டனை விதிக்கப்பட்டவர்கள் உழைப்பதுபோல் பெருந்துன்பத்துடன் உழைப்பதினால் சக்திதீர்ந்துபோய் இளைப்படைந்து இருத்தல்" என்பதைக் குறித்தது.[32] கர்த்தர் அவர்களைக் கோடீஸ்வரர் களாகக் காணவில்லை; அவர், அவர்களைக் கைவிடப்பட்ட அடிமை களாகக் கண்டார்! இயேசு, "பரிதபிக்கப்படத்தக்க" என்ற சொற்றொ டரையும் பயன்படுத்தினார். இதற்கான கிரேக்க வார்த்தையானது இரக்கம் தேவைப்படுபவர்களைப்பற்றிப் பேசியது. கர்த்தருடைய பார்வையில், அவர்கள் புகழ்ச்சிக்குப் பாத்திரராய் இருப்பதற்குப் பதிலாக, பரிதாபத்திற்கு உரியவர்களாய் இருந்தனர். இயேசுவின் ஆய்வை அவர்கள் எவ்வளவாக வெறுத்திருக்க வேண்டும்! மேட்டிமையுள்ள மனிதன், (தன்னைப்பற்றிப் பிறர்) பரிதபிப்பதை, வேறு எதைக் காட்டிலும் அதிகமாக வெறுக்கின்றான்.*

*பின்பு இயேசு, அவர்களின் ஆவிக்குரிய பிரச்சனையை, திட்டவட்டமான சொற்றொடர்களில் விவரித்தார்:*

| ***நகரம் (மற்றும் சபை)*** | ***நிலை (வச. 17)*** |
|---|---|
| *செல்வவளம் (வங்கித்துறை)* | *தரித்திரர்* |
| *மருத்துவ மையம் (கண்களுக்கு விசேஷித்த சிகிச்சை)* | *பார்வையற்றவர்* |
| *உடைத் தயாரிப்பு நிறுவனம் (கறுப்புக் கம்பளி)* | *நிர்வாணி* |

*அவர்கள், தாங்கள் "செல்வந்தர்களாய்" இருந்ததாக நினைத்தனர், ஆனால் உண்மையில் அவர்கள் "தரித்திரர்களாய்" இருந்தனர். "தரித்திரர்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது "கொஞ்சம் உடையவர்கள்" என்று அர்த்தப்படுவதில்லை; இது "ஒன்றும் இல்லாத வர்கள்" என்று அர்த்தப்படுகிறது. அவர்கள் ஆசியா மைனர் பகுதியின் மிகுந்த செல்வவளம் கொண்ட நகரத்தில் வாழ்ந்திருந்தபோதிலும், ஆவிக்குரிய வகையில் தரித்திரராகவே இருந்தனர். சிமிர்னாவில் இருந்த சபையானது, "செல்வத்துடன் இருந்த ஏழை சபையாக" இருந்த வேளையில், லவோதிக்கேயாவில் இருந்த சபை, "ஏழையாக இருந்த செல்வமிக்க சபையாக" இருந்தது.*

*அவர்கள், உலகத்தில் இருந்தவற்றிலேயே மிகச்சிறந்த கண்சிகிச்சை பெற வகைகொண்டிருந்தனர், ஆனால் அவர்கள் "பார்வையற்றவர்களாக"[33] இருந்தனர். அவர்கள் தங்களின் ஆவிக்குரிய நிலையைக் காணமுடியாத வர்களாய் இருந்தனர் மற்றும் அவர்கள் கிறிஸ்தவத்தின் இயல்பையும் காண முடியாதவர்களாய் இருந்தனர். கிறிஸ்தவத்தைப் பற்றி உணர்வெழுச்சி*

யடைதலுக்குக் கிறிஸ்தவம் பாத்திரமானதாக இருந்தது என்பதை அவர்கள் காண்பது அவசியமாய் இருந்தது!

ஹான்ஸ் கிறிஸ்டியன் ஆண்டர்ஸனின் கதையில்[34] வரும் பேரரசரைப் போல, லவோதிக்கேயர்கள், உண்மைநிலையில் ''நிர்வாணிகளாய்'' இருந்தபோது, தாங்கள் மிகநேர்த்தியான உடையை உடுத்தியிருந்ததாக நினைத்தனர். வேதவசனங்கள் முழுவதிலும், நிர்வாணம் என்பது வெட்கக் கேட்டைக் குறிக்கும் சொல்லாக உள்ளது.[35] கிழக்கத்திய நாடுகளில், ஒரு மனிதனின் உடைகளை உரிந்து போடுதல் என்பது அம்மனிதனை அவமானப்படுத்தியது,[36] ஆனால் அவனுடைய முதுகில் ஒரு அங்கியை அணிவித்தல் என்பது அவனைக் கனப்படுத்தியது.[37] உலகரீதியில், லவோதிக்கேயர்கள் விலைமதிப்பற்ற, காகம்போலக் கருமையான அங்கிகள் ஆகியவற்றைக் கொண்டிருந்தனர்; ஆனால் ஆவிக்குரிய வகையில் அவர்கள், கர்த்தர் மாத்திரமே அளிக்கக்கூடிய நீதியென்னும் வெண் அங்கிகளைக் கொண்டிருக்கவில்லை (3:18ஐக் காணவும்).

## முடிவுரை

இந்தப் பாடத்தில் நாம், லவோதிக்கேயர்களின் பிரச்சனையைச் சுட்டிக்காண்பிக்க முயற்சி செய்திருக்கின்றோம். அடுத்த பாடத்தில் நாம், இயேசுவின் தீர்வைக் காண்போம்.

இந்த எடுத்துரைப்பை நாம் முடிக்கும் இவ்வேளையில், இரண்டு உண்மைகள் வலியுறுத்தப்பட வேண்டும்: (1) லவோதிக்கேயாவில் இருந்த பிரச்சனை, சபைக்குழுமத்தினுடையதாக மாத்திரமின்றி, தனி நபருக்குடையதாகவும் இருந்தது. லவோதிக்கேயாவில் இருந்த சபையின் தனிநபர்கள் வெதுவெதுப்பாய் இருந்தபடியால், அந்த சபையும் வெதுவெதுப்பாக இருந்தது. ஒரு சபைக்குழுமத்தில் இருந்து வெதுவெதுப்பான உறுப்பினர்கள் நீக்கப்பட வேண்டுமென்றால், ஒவ்வொரு உறுப்பினரும் தன்னைப் பற்றிய இருப்புச்சோதனையை மேற்கொள்ள வேண்டும், பின்பு தனிப்பட்ட செயல்முறையைச் செய்ய வேண்டும்.

(2) லவோதிக்கேயாவில் இருந்த பிரச்சனையானது வட்டாரத்திற்குரியதல்ல ஆனால் உலகளாவியதாக இருந்தது. லவோதிக்கேயாவின் பிரச்சனை தனித்தன்மை வாய்ந்ததல்ல, அதாவது வெதுவெதுப்பானவர்கள் ஆண்டுகளினூடே சபையில் பாதிப்பை ஏற்படுத்தத் தொடருவார்கள் என்று அறிந்திருந்தபடியால், கர்த்தர், இந்தக் கடிதத்தைப் பாதுகாத்தார். மதரீதியாக மனநிறைவுள்ளவர்களாகுதல் என்பது எவ்வளவு சுலபமானதாக உள்ளது!

இந்த வரிகளைப் படிக்கும் ஒவ்வொருவரும் இவற்றைத் தனிப்பட்ட முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதற்காக நான் ஜெபிக்கின்றேன். எஜமானருக்கான உங்கள் ஊழியத்தில் நீங்கள் வெதுவெதுப்பானவர்களாகி இருக்கின்றீர்களா? நீங்கள் உங்கள் உற்சாகத்தை இழந்திருக்கின்றீர்களா? நீங்கள் ஆவிக்குரிய வகையில் உங்களுக்கு வசதியான செயல்திறன் குன்றிய நிலையில் அமர்ந்து அமைந்து இருக்கின்றீர்களா? அப்படியானால், இன்றே கர்த்தருக்கான உங்கள் உறுதிப்பாட்டைப் புதுப்பியுங்கள்!

*அவருக்கான உங்கள் ஊழியத்தில் நீங்கள் அக்கினியாய் இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகின்றார்!*[38]

---

குறிப்புகள்

*[1]எனது பயணக்குழுவை வழிநடத்திய துருக்கிய வழிகாட்டி, "லவோதிக்கேயாவை"* "LAH-oh-de-ce-uh" *என்று உச்சரித்தார். [2]இந்தப் புத்தகத்தில் உள்ள ஆசியாவின் ஏழு சபைகளும் பத்மு தீவும் என்ற வரைபடத்தைக் காணவும். [3]நியூயார்க் நகரத்தில் உள்ள வால் தெரு* [Wall Street] *என்பது அமெரிக்கநாட்டின் நிதிநிலை மையம் என்று பொதுவாகக் கருதப்படுகிறது. [4]அது அவர்கள் பகுதியில் கௌரவமானதாக இருந்தது - ஆனால் நிதி நிலைகளில் பாராட்டத்தக்கதாக இருத்தல் என்பது மதரீதியாக ஏற்புடையதாயிருக்க வேண்டும் என்று அவசியமில்லை. லவோதிக்கேயாவில் இருந்த கிறிஸ்தவர்கள், இரட்சிப்பைப் பொறுத்தமட்டில் தங்கள் சொந்தத்தில் எதையும் ஏற்படுத்த இயலாது என்பதை உணர்ந்தறிய வேண்டியிருந்தது. [5](அர்க்கன்சாஸில் உள்ள வெந்நீர் ஊற்றுக்கள்போல்) தாதுவளம் நிறைந்த வெந்நீர் ஊற்றுக்களை ஏராளமாகக் கொண்ட எந்தப் பகுதியும், பெரும்பாலும் ஆரோக்கியப் பராமரிப்பு நிலையம் என்று அறியப்பட்டு பயணிகளைக் கவர்ந்தது. [6]அமெரிக்காவில், "கறுப்பு ஆடு" என்பது* ("He is the black sheep of his family" *என்ற வாக்கியத்தில் உள்ளதுபோல்) எதிர்மறை அர்த்தம் கொண்டுள்ளது, ஆனால் லவோதிக்கேயாவில் இவ்வாறு இருக்கவில்லை. லவோதிக்கேயாவில் ''கறுப்பு ஆடு'' என்பது பணத்தை அர்த்தப்படுத்தியது! [7]எப்பாப்பிரா என்ற பெயர்கொண்ட, பவுலின் உடன் ஊழியர் ஒருவர், கொலோசே பட்டணத்தில் சபையை நிலைநாட்டினார் என்பது உறுதி (கொலோசெயர் 1:7; 4:12), இவர் அந்த நகரத்திற்கு அருகில் இருந்த லவோதிக்கே யாவிலும் சபையை நிலைநாட்டியிருக்கலாம். [8]இவ்வசனப் பகுதியானது, புதிய ஏற்பாட்டுப் புத்தகங்கள் சபைகளில் எவ்வாறு சுற்றுக்கு விடப்பட்டன என்பது பற்றிய உட்கண்ணோட்டத்தைத் தருகிறது. [9]லவோதிக்கேயாவுக்குப் பவுலின் கடிதத்தைப் பொறுத்தமட்டில், இங்கு இரண்டு சாத்தியக்கூறுகள் உள்ளன: (1) இது "எபேசியருக்கு எழுதிய நிருபம்" என்று நாம் அழைக்கும் கடிதமாக நமக்காகப் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்தது. பழைய கையெழுத்துப் பிரதிகளில், எபேசியர் 1:1ல், "எபேசுவில்" என்ற வார்த்தை இருப்பதில்லை என்பதாலும், எபேசியருக்கு எழுதிய நிருபத்தைப் பவுல், தனித்தனி உறுப்பினர்களுக்கான அவரது வழக்கமான வாழ்த்துதலுடன் முடிக்கவில்லை என்பதாலும், இது பவுலினால் எழுதப்பட்ட பொதுவான கடிதம் என்றும் இவற்றின் தனித்தனிப் பிரதிகள், முதலில் சபையின் இருப்பிடத்தைக் குறிப்பிடுவதன் மூலம் அவைகளுக்கு உரியவைகளாக்கப்பட்டன என்றும் சிலர் முடிவுசெய்துள்ளனர். (2) லவோதிக்கேயாவிற்கு எழுதப்பட்ட கடிதம், புதிய ஏற்பாட்டின் பிற புத்தகங்களில் காணப்படும் விஷயங்களைப் பிரதியெடுத்ததாக இருந்ததாலும், ஆகவே அது அவசியமற்றதாக இருந்தது என்பதாலும், அது நமக்காகப் பாதுகாத்து வைக்கப்படவில்லை. இயேசுவினால் பேசப்பட்ட ஒவ்வொரு வார்த்தையையும் நாம் கொண்டிருப்பதில்லை (யோவான் 20:30, 31) என்பது போலவே, ஏவுதல் பெற்ற மனிதர்களால் எழுதப்பட்ட ஒவ்வொரு வார்த்தையையும் நாம் கொண்டிருப்பதில்லை - ஆனால் நாம் கொண்டிருக்க வேண்டும் என்று தேவன் விரும்பிய யாவற்றையும், எந்த நற்கிரியையும் செய்ய நம்மைத் தகுதிப்படுத்துவதற்கு அவசியமான ஒவ்வொரு விஷயத்தையும் (2 தீமோத்தேயு 3:17) நாம் கொண்டுள்ளோம். [10]3:14ல் உள்ள ஒரு சொற்றொடரான,*

“உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சியும்” என்பது 1:5ல் உள்ள (“உண்மையுள்ள சாட்சியும்” என்ற) சொற்றொடரைப் போன்றதாக உள்ளது,

[11]பழைய ஏற்பாட்டில், “ஆமென்” என்பது தேவனுக்கான ஒரு சிறப்புப் பெயராகப் பயன்படுத்தப்பட்டுள்ளது (ஏசாயா 65:16ல், “சத்தியம்” என்பது “ஆமென்” என்பதற்கான வார்த்தையின் மொழிபெயர்ப்பாக உள்ளது), ஆனால் இது ஒரு தகுதிபெயராகப் பயன்படுத்தப்படுவதில்லை. [12]ஆமென் என்ற கிரேக்க வார்த்தை, “to be” என்ற வினைச் சொல்லின் வேற்றுமை உருபை ஏற்றுத் திரிந்த வடிவமாக உள்ளது. இவ்விதமாக, “ஆமென்” என்று கூறுதல் சிலவேளைகளில் “அப்படியே ஆகட்டும்!” என்று அர்த்தப்படுகிறது. [13]KJV வேதாகமத்தில் “verily” என்றுள்ளது. [14]1:5ல் இயேசு, “உண்மையுள்ள சாட்சி” என்று குறிப்பிடப்பட்டார். அங்கு, மரணபரியந்தமும் இயேசு உண்மையுடன் இருந்த (அதாவது, வேதசாட்சியாக இருந்த) விஷயத்தின்மீது வலியுறுத்தம் செலுத்தப்பட்டது. இங்கு, அவரது நம்பத்தகுந்த நிலையின்மீது வலியுறுத்தம் செலுத்தப்படுகிறது. [15]இந்த வசனம், இயேசு படைக்கப்பட்டவர் என்று நிரூபிக்க முயற்சிப்பதற்காக யெகோவா சாட்சிக்காரர்களால் பயன்படுத்தப்படுகிறது. குறிப்பு எண் 18ஐக் காணவும். [16]இவ்விடத்தில் இயேசு தம்மை, ஆவிக்குரிய படைப்பின் - அதாவது, சபையின் - தோற்றுவிப்பாளர் என்று குறிப்பிடுவதாகச் சிலர் நினைக்கின்றனர். இதன் சந்தர்ப்பப் பொருளானது, உலகப்பிரகாரமான படைப்பு என்ற கருத்தை ஆதரிக்கிறது, ஆனால் ஆவிக்குரிய படைப்பு என்பதும் மறைமுகமாக உணர்த்தப்படலாம். [17]NASB, KJV மற்றும் தமிழ் வேதாகமம் ஆகியவற்றில், “ஆதியும்” என்று மொழிபெயர்க்கப்பட்ட, *arche* என்ற கிரேக்கவார்த்தை, “ஆளுநர்” அல்லது “முதன்மையானவர்” என்றும் மொழிபெயர்க்கப்பட முடியும். இவ்வாறு, NIV வேதாகமத்தில், “the ruler of God’s creation” [“தேவனுடைய படைப்பின் ஆளுநர்”] என்றுள்ளது. [18]“சகலமும் அவரைக்கொண்டு படைக்கப்பட்டது” மற்றும் “அவர் சகலத்திற்கும் முந்தினவர்” என்றால், இயேசு படைக்கப்பட்டவராயிருப்பதற்கு வழியே இல்லை. யோவான் 1:1-3; எபிரெயர் 1:8, 10ஐக் காணவும். [19]மேற்கத்திய உலகத்தில் உள்ள பல கிறிஸ்தவர்களைப் பற்றி லவோதிக்கேயர்களின் எண்ணப்போக்கு மிகவும் ஏற்புடைய வகையில் பேசுகிறது என்பதால் நான் இந்தப் பத்தியை உள்ளடக்குகின்றேன். இந்தப் பத்தியானது, நீங்கள் வாழும் பகுதிக்கு ஏற்புடையதாக இல்லையென்றால், லவோதிக்கேயர்களின் “கிரியைகள் மனச்சாட்சிக்கு ஒத்தடம் கொடுப்பவையாக, மிகவும் குறைவானவைகளாக, ஆழமான உறுதிப்பாட்டின் உற்சாகம் இல்லாத செயல்களாக இருந்தன” என்று மாத்திரம் விளக்கப்படுத்துங்கள். [20]Boyd Carpenter, quoted by James M. Tolle, *The Seven Churches of Asia* (Pasadena, Tex.: Haun Publishing Co., 1968), 73.

[21]“அனல்” என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையான *Zeo* என்பது, *Zestos* என்ற கிரேக்க வார்த்தையின் வேராக உள்ளது. [22]லவோதிக்கேயர்கள் வெதுவெதுப்பாக இருப்பதைக் காட்டிலும் குளிராக இருத்தலை இயேசு விரும்பித் தேர்ந்து கொண்டது ஏன் என்பது பற்றி இடர்ப்பாடு அடைகின்ற ஒருசிலர், “குளிர்” மற்றும் “அனல்” என்று இரண்டுமே நல்ல கருத்துணர்வில் பயன்படுத்தப் பட்டிருக்கையில், “வெதுவெதுப்பு” என்பது மோசமான கருத்துணர்வில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று கருத்துத் தெரிவிக்கின்றனர். எடுத்துக்காட்டாக, நம்மில் பெரும்பான்மையானவர்கள், சூடான பானங்களையும், குளிர் பானங்களையும் மகிழ்வுடன் விரும்பி அருந்தமுடிகிறது, ஆனால் வெதுவெதுப்பான பானங்களை நமது வயிறு ஏற்பதில்லை. இந்தச் சிந்தனையை ஏற்றுக் கொள்கின்றவர்கள், வெளிப்படுத்தின விசேஷம் 3:15, 16ல் “குளிர்” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை மத்தேயு 10:42ல் “ஒரு கலசம்

*தண்ணீர்'' என்பதைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் குறிப்பிடுகின்றனர். இருப்பினும், பெரும்பாலான எழுத்தாளர்கள், வெளிப்படுத்தின விசேஷம் 3:15, 16ல் உள்ள "குளிர்" என்ற வார்த்தை ஆவிக்குரிய வகையில் விரும்பத்தகாத நிலையைக் குறிப்பிடுகிறது என்றே நம்புகின்றனர்.* [23]*விசுவாச விலக்கம் என்பது ஆவிக்குரிய வகையில் "குளிரான தன்மையுடன்" இருத்தலுக்கான இன்னொரு சாத்தியக்கூறாக உள்ளது.* [24]*லவோதிக்கேயா நகரம் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருந்தபோது, நகரத்தின் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதற்காக, யூதர்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தனர். பின்வந்த ஆண்டுகளினூடே, வர்த்தகம் மற்றும் ஆதாயம் ஆகியவற்றின் வாய்ப்புக்களினால் கவர்ந்திழுக்கப்பட்ட மற்ற யூதர்களும் லவோதிக்கேயாவுக்கு வந்திருந்தனர்.* [25]*நேரடியான அர்த்தத்தில், வசனமானது "நான் ... போடவிருக்கின்றேன்" என்றே கூறுகிறது.* [26]Eugene H. Peterson, *The Message: New Testament With Psalms and Proverbs* (Colorado Springs, Colo.: NavPress Publishing Group, 1995), 614-15. [27]*வசனம் 20ஐக் கவனியுங்கள்: அவர்கள் தங்கள் வாழ்வில் இருந்து இயேசுவை வெளியேற்றிப் பூட்டிக்கொண்டிருந்தனர்.* [28]*இந்த வசனத்தை லூக்கா 12:19 உடன் ஒப்பிடவும்.* [29]*உலகில் நான் வாழும் பகுதியில் நாங்கள், "மதத்தில் 'குளிராக' இருத்தலை அவர்கள் ஒழுக்கநெறி என்று நினைத்தனர்" என்று கூறுவதுண்டு.* [30]*"கதவு ஆணியைப் போல் செத்திருத்தல்" என்பது சுய விளக்கம் உடைய பேச்சுருவகமாக உள்ளது. இதற்குப் பதிலாக நீங்கள் வாழும்பகுதியில் பயன்படுத்தப்படும் வேறொரு சொல்விளக்கத்தைப் பயன்படுத்த நீங்கள் விரும்பலாம். (''செத்த மரக்கட்டைபோல" என்று நாம் கூறலாம்.)*

[31]*மூலவசனத்தில், ''the* wretched [ones]'' *என்றுள்ளது - இது, மிகவும் பரிதபிக்கப்படத்தக்கவர்கள் என்பதைக் குறிக்கிறது.* [32]Tolle, *75.* [33]*2 பேதுரு 1:9ஐக் காணவும்.* [34]*ஹான்ஸ் கிறிஸ்டியன் ஆண்டர்ஸன் அவர்கள், "பேரரசரின் புதிய உடை" என்று அழைக்கப்பட்ட ஒரு கதையை எழுதினார், அதில் ஒரு பேரரசர் நிர்வாணமாக இருந்தார் என்பதை ஒரு குழந்தை சுட்டிக்காண்பிக்கும் வரையில் அவர், மாயமான பொருளினால் ஆன ஒரு கம்பீரமான உடையைத் தாம் அணிந்திருந்ததாக நம்பும்படி வஞ்சிக்கப்பட்டார்.* [35]*இது, தேவனால் அங்கீகரிக்கப்பட்ட திருமண வாழ்வில் ஒரு கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் உள்ள தனிப்பட்ட நிர்வாணத்திற்கு (ஆதியாகமம் 2:25; 1 கொரிந்தியர் 7:4) நடைமுறைப்படுத்தப்படுவதில்லை, இது பொதுவான நிர்வாணத்தையே குறிப்பிடுகிறது.* [36]*2 சாமுவேல் 10:4; ஏசாயா 20:4; எசேக்கியேல் 16:37-39; நாகூம் 3:5 ஆகிய வசனங்களைக் காணவும்.* [37]*ஆதியாகமம் 41:42; எஸ்தர் 6:6-11; தானியேல் 5:29 ஆகிய வசனங்களைக் காணவும்.* [38]*இந்தப் பாடத்தை ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தினால், கிறிஸ்தவர்களின் மனநிறைவு என்பது அடிப்படை செயல்முறைப்படுத்துதலாக இருக்கும், ஆனால் கிறிஸ்தவர்களாகும்படி மக்களை அழைத்தல் உள்ளடக்கப்படட வேண்டும் (கலாத்தியர் 3:26, 27). அந்த அழைப்பானது, அவர்கள் "கட்டளைகளுக்குக் கீழ்ப்படிதல் என்பதுடன் நின்றுவிடக்கூடாது; மாறாக, அவர்கள் தங்கள் வாழ்வைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும்" என்பதை வலியுறுத்த வேண்டும்.*

# மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. இந்தப் புத்தகத்தில் உள்ள ஆசியாவின் ஏழு சபைகளும் பத்மூ தீவும் என்ற வரைபடத்தைப் பயன்படுத்தி, அதிகாரம் 1முதல் 3வரை கொடுக்கப்பட்டுள்ள வரிசைமுறைப்படி ஆசியாவில் இருந்த ஏழு சபைகளின் அமைவிடங்களை உங்களால் சுட்டிக்காண்பிக்க முடியுமா?
2. லவோதிக்கேயாவின் எந்த மூன்று பண்புகள் அங்கிருந்த சபைக்குரிய கடிதத்தில் பிரதிபலிக்கின்றன?
3. "ஆமென்" என்ற வார்த்தை எதை அர்த்தப்படுத்துகிறது? இதை இயேசுவுக்கு நடைமுறைப்படுத்தும்போது இது எதை அர்த்தப்படுத்துகிறது?
4. ''தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிறவர்'' என்ற சொற்றொடரின் அர்த்தம் என்ன?
5. ஆவிக்குரிய வகையில், "குளிராய்" அல்லது "அனலாய்" இருத்தல் என்பது எதை அர்த்தப்படுத்துகிறது?
6. "வெதுவெதுப்பாய்" இருத்தல் என்பது எதை அர்த்தப்படுத்துகிறது? ஆவிக்குரிய வெதுவெதுப்புத்தன்மைக்குச் சில உதாரணங்களைத் தரவும்.
7. லவோதிக்கேயாவில் இருந்த கிறிஸ்தவர்கள் வெதுவெதுப்பாய் இருப்பதற்குப் பதில், குளிராய் இருந்திருக்கலாம் என்பதை இயேசு விரும்பித் தேர்ந்துகொண்டது ஏன்?
8. இயேசு, லவோதிக்கேயர்கள் "துப்பிவிட" அல்லது "வாந்திபண்ணிப் போட'' தயாராயிருந்ததாகக் கூறியபோது எதை அர்த்தப் படுத்தினார்?
9. லவோதிக்கேயர்கள் தங்களை எவ்வாறு கண்ணோக்கினார்கள்? ஒருவர் தமது ஆவிக்குரிய நிலை பற்றி சுயமாக வஞ்சிக்கப்பட்டிருத்தல் என்பது சாத்தியமாக உள்ளதா?
10. அவர்களின் உண்மையான ஆவிக்குரிய நிலை என்னவாக இருந்தது?
11. அவர்கள் எந்தக் கருத்தமைவில் "தரித்திரராக," "பார்வையற்றவர் களாக," "நிர்வாணிகளாக" இருந்தனர்?